பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
*18 12 2025 THURSDAY 12 40 PM*
ஆகாஷவாணி - <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியாவும் ஓமனும் வேளாண் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படவிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. ஏகலைவா உண்டு உறைவிடப் பள்ளிகள் மூலம் பழங்குடியின மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்கப்படுவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. மேற்குவங்க வரைவு வாக்காளர் பட்டியல் தொடர்பான ஆட்சேபனைகள் மீது ஒருவாரத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

4. சத்திஷ்கடில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் 3 நக்ஸலைட்டுகள் கொல்லப்பட்டனர்.

5. அமெரிக்காவில் முதலீட்டை அதிகரிக்கவும், வேலைவாய்ப்புகளை பெருக்கவும் கூடுதல் வரி விதிப்பு அவசியமாகிறது என்று அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<

இந்தியாவும் ஓமனும் வேளாண் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படவிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மஸ்கட்டில் நடைபெற்ற இந்தியா - ஓமன் வர்த்தக மாநாட்டில் உரையாற்றிய அவர், இதன்மூலம் இந்திய விவசாயிகள் அதிகம் பயன்பெறுவார்கள் என்றும், ஓமனின் உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த மாநாடு, இந்தியா - ஓமன் இடையேயான ஒத்துழைப்புக்கு உத்வேகம் அளிப்பதாகவும், வருங்காலத்தில் இது உச்சத்தை எட்டும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

*இந்த மாநாட்டில் பேசிய மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல், இந்தியா - ஓமன் இடையே கையெழுத்தாகும் விரிவான பொருளாதார ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம், இருநாட்டு மக்களின் வளமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும் என்றார்.*

>>>>>>><<<<<<

*பழங்குடியின மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்கும் நோக்கில், நாடுமுழுவதும் 440 ஏகலைவா உண்டு உறைவிடப் பள்ளிகள் இயங்கி வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

*மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. ஜுவல் வோரம், இதுவரை 728 ஏகலைவா பள்ளிகளை தொடங்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாக கூறினார்.*

*பழங்குடியின மக்களின் நலனுக்காக, பிரதமரின் JANMAN உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.*

*பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கும் 63 ஆயிரம் கிராமங்களை மேம்படுத்த, 80 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டம் தொடங்கப்பட்டிருப்பதாகவும் திரு. ஜுவல் வோரம் கூறினார்.*

>>>>>>><<<<<<

*OTT தளங்களில் வெளியாகும் திரைப்படங்கள், தணிக்கைத் துறையின் வரம்பிற்கு உட்பட்டது அல்ல என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.*

*மக்களவையில் இதனை தெரிவித்த அவர், OTT தளங்களில் இடம்பெறும் அம்சங்கள் தகவல் தொழில்நுட்ப விதிமுறைகள் 2021-ல் பகுதி-3ல் இடம்பெறுள்ள அம்சங்களில் அடிப்படையில் முறைப்படுத்தப்படுவதாக கூறியுள்ளார்.*

எனினும், தடை செய்யப்பட்ட அம்சங்கள் OTT -யில் ஒளிபரப்பப்படுவதை தடுக்க நெறிமுறைகள் வகுக்கப்படுவது அவசியம என்றும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<

மேற்குவங்க வரைவு வாக்காளர் பட்டியல் தொடர்பான ஆட்சேபனைகள் மீது ஒருவாரத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது

குறிப்பிட்ட முகவரியில் வசிக்காதவர்கள் என அடையாளம் காணப்பட்ட 30 லட்சத்து 59 ஆயிரம் வாக்காளர்களுக்கு இந்த நோட்டீஸ் அனுப்பப்படவுள்ளதாக தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நோட்டீஸ் கிடைக்கப் பெற்ற 85 வயதுக்குட்பட்ட வாக்காளர்கள், 7 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலகத்தை அணுகி, தங்களது முறையீட்டை தெரிவிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்களின் வீடுகளுக்கே அதிகாரிகள் நேரில் சென்று விளக்கத்தை கேட்டறிவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<

அலுவல் ரீதியிலான பயணங்களுக்கு, விசா ரத்து செய்வதற்கான ஒப்பந்தம் இந்தியா - சவுதி அரேபியா இடையே ஏற்பட்டுள்ளது.

முக்கிய பிரமுகர்கள் மற்றும் உயரதிகாரிகள், பரஸ்பரம் இருநாடுகளிலும் குறுகிய காலம் தங்கிச் செல்வதற்கு விசா அளிக்க இந்த ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளதாக சவுதி அரேபியாவுக்கான இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தியா - சவுதி அரேபியா இடையே நீடித்த ஒத்துழைப்புக்கான குழுவின் மூலம், இருதரப்பு பரிமாற்றங்களை இந்த ஒப்பந்தம் ஊக்குவிக்கும் என்றும் தூதரக செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*>>>>>>>><<<<<<*

*UDAN திட்டம் மேலும் பத்தாண்டுகளுக்கு நீட்டிக்கப்படும் என்று சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.*

*மக்களவையில் கேள்வி நேரத்தின் போது, இதனை தெரிவித்த அவர், இத்திட்டம் செயல்பாட்டுக்கு வந்த பிறகு, நாட்டில் உள்ள விமான நிலையங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக கூறினார்.*

*2014ஆம் ஆண்டு 74 விமான நிலையங்கள் மட்டுமே செயல்பட்டு வந்த நிலையில், தற்போது இந்த எண்ணிக்கை 160ஆக அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.*

*நாட்டின் பல்வேறு இடங்களிலும் உள்ள சிறு விமான நிலையங்களை உடான் திட்டத்தின் கீழ், மேம்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*வடகிழக்கு மற்றும் உத்ராகண்ட் மாநிலங்களில் ஹெலிகாப்டர் சேவைகளை தொடங்கவும் அரசு ஆதரவு அளித்து வருவதாக திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.*

*>>>>>>>><<<<<<*

*சத்திஷ்கடில் பாதுகாப்புப் படையினர் இன்று காலை மேற்கொண்ட நடவடிக்கையில் 3 நக்ஸலைட்டுகள் கொல்லப்பட்டனர்.*

*சுக்மா மாவட்டத்திற்கு உட்பட்ட கிஸ்தாராம் வனப்பகுதியில் நக்ஸலைட்டுகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில், ரிசர்வ் காவல்துறையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையின் போது, இருதரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட கடும் துப்பாக்கிச் சண்டையில் இவர்கள் கொல்லப்பட்டனர்.*

அப்பகுதியை பாதுகாப்பு படையினர் சுற்றி வளைத்து தொடர்ந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

>>>>>>><<<<<<

நெதர்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. *David Van Weel* அரசுமுறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

இதுகுறித்து வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தில்லி மற்றும் மும்பையில் நெதர்லாந்து அமைச்சர் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், பல்வேறு துறைகளிலும் இந்தியா – நெதர்லாந்து இடையேயான இருதரப்பு ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

இந்திய பொருட்கள் மீதான அமெரிக்க வரி விதிப்பால் தமிழ்நாட்டில் ஏற்றுமதி துறைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு இருதரப்பு ஒப்பந்தம் மூலம் விரைந்து தீர்வு காணுமாறு, மத்திய அரசை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், அமெரிக்காவின் 50 சதவீத வரி விதிப்பால், தமிழகத்தில் ஜவுளி, தோல் பொருட்கள் மற்றும் காலணி ஏற்றுமதி பாதிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர் மாவட்டங்களில் பின்னலாடை ஏற்றுமதியாளர்களுக்கு தினந்தோறும் 60 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்களில் காலணி உற்பத்தி தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

எனவே பிரதமர் திரு. நரேந்திர மோடி, இப்பிரச்சினையில் தலையிட்டு, முன்னுரிமை அடிப்படையில் தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் அக்கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>>><<<<<<

நாட்டின் பாதுகாப்பு தளவாட உற்பத்தியை 2029ஆம் ஆண்டுக்குள் 3 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாதுகாப்பு தளவாட உற்பத்தி ஏற்கனவெ குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சி அடைந்து, ஒரு லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளதாக குறிப்பிட்டார்.

அதேபோன்று, இந்த தளவாடங்களின் ஏற்றுமதி, அடுத்த நான்காண்டுகளில் இரட்டிப்பாகி, தற்போதைய 25 ஆயிரம் கோடி ரூபாயிலிருந்து, 50 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிக்கப்படும் என்றும் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<

அமெரிக்காவில் முதலீட்டை அதிகரிக்கவும், வேலைவாய்ப்புகளை பெருக்கவும் கூடுதல் வரி விதிப்பு அவசியமாகிறது என்று அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டு நிறைவடையவுள்ள நிலையில், மக்களுக்கு உரையாற்றிய அவர், இந்த வரி விதிப்புகள், தமது பொருளாதார கொள்கையின் முக்கிய அம்சமாக உள்ளது என்றார்.

குறுகிய கால ஆதாயங்களை விட, உலகளாவிய வர்த்தகத்தை மறுவடிவமைப்பதற்கு இந்த வரி விதிப்பு உதவிகரமாக உள்ளதாகவும் திரு. டோனல்ட் ட்ரம்ப் குறிப்பிட்டார்.

>>>>>>>><<<<<<

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மற்றும் செமிகண்டக்டர் உற்பத்தி துறையில் அமெரிக்காவின் நெருங்கிய பங்குதாரராக இந்தியா திகழ்கிறது என்று அமெரிக்க வெளியுறவுத்துறை துணைச் செயலாளர் திரு. Jacob Helberg கூறியுள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் பிப்ரவரி மாதம் நடைபெறவுள்ள இந்திய செயற்கை நுண்ணறிவு தாக்க மாநாட்டில் தாம் கலந்து கொள்ளவிருப்பதாக தெரிவித்தார்.

இந்தியாவுடனான வர்த்தக உடன்படிக்கைக்கும், விநியோகச் சங்கில் பாதுகாப்பு குறித்த பேச்சுவார்த்தைக்கும் தொடர்பில்லை என்றும் இரண்டும் தனித்தனியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. Jacob Helberg கூறினார்.

>>>>>>><<<<<<

உத்தரபிரதேசத்தில் இன்று கடும் பனிமூட்டம் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

ஹிமாச்சலப் பிரதேசம், பீகார், ஜார்க்கண்ட், ஒடிசா மாநிலங்களிலும் வரும் சனிக்கிழமை வரை, இதே நிலை காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப், ஹரியானா, சண்டிகர் மற்றும் உத்ராகண்டிலும் நாளை வரை பனிமூட்டம் அதிகரித்து காணப்படும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

ஜம்மு கஷ்மீர் மற்றும் லடாக்கில் வரும் 23ஆம் தேதிவரை லேசான மழையுடன் கூடிய பனிப்பொழிவு நிலவக்கூடும் என்றும், குஜராத்தில் குறைந்தபட்ச வெப்பநிலை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<